Date. 07.07.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**<u>OS.19/2024</u>**

**வா.சா. 2**

**பெயர். திரு. ஐதர் அலி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் சுமையா பானுவிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை. சுமையா பானு என்பவர் கூப்பிட்டார்கள் என்பதற்காக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனது சொந்த ஊர் சேலம். எனக்கு சீர்காழியில் யாரையும் தெரியாது. சீர்காழியில் நடந்ததாக சொல்லும் திருமணத்திற்கு யார் சொல்லி போனேன் என்றால், சுமையா பானுவின் அப்பா ஷேக் அகமது சொல்லித்தான் போனேன். நசீர் அஹமதுவின் குடும்பத்தை குறித்து, அவர்களது குடும்ப நபர்களை குறித்து, எனக்கு எதுவும் தெரியாது. நசீர் அஹமதுவிற்கு ஒரு மனைவி மற்றும் ஐந்து குழந்தைகள் இருந்தார்கள் என்பது இந்த திருமணம் முடிந்த பிறகு எனக்கு தெரியவந்தது. சுமையா பானுவின் அப்பா எனக்கு அண்ணன் முறையாகிறது. எங்களது முஸ்லீம் சமூக வழக்கப்படி ஆண்கள் மொத்தம் ஏழு திருமணம் செய்து கொள்ளலாம். பெண்கள் எத்தனை திருமணம் செய்து கொள்ளலாம் என்று எனக்கு தெரியாது. ஷேக் அகமது அவரது வீட்டு விசேஷங்களில் ஏதாவது ஒன்றுக்கு கூப்பிடுவார். நான் வருவேன். சுமையா பானுவின் வீட்டில் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. சுமையா பானுவிற்கு இதற்கு முன்பு ஒரு திருமணம் நடந்ததாக சொன்னார்கள். ஆனால் அந்த திருமணத்திற்கு நான் போகவில்லை. சுமையா பானுவின் முதல் கணவர் உயிருடன் உள்ளாரா? என்று எனக்குத் தெரியாது. சுமையா பானு 2005-ல் திருமணம் நடந்ததாகவும், 2010-ல் தலாக் நடந்து விட்டதாகவும் சொன்னார். இந்த விவரத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அந்த திருமணத்திற்கு பிறகு சுமையா பானுவின் குடும்ப நடவடிக்கைகள் எதுவும் எனக்கு தெரியாது. சீர்காழியில் தயார் செய்யப்பட்ட ஆவணம் பொய் என்று கண்டறியப்படும் பட்சத்தில், என் பேரில் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. அந்த ஆவணம் தயாரிக்கப்பட்ட ஆவணம் அல்ல. நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும், என் சாட்சியத்தில் உண்மை தன்மை கிடையாது என்றும், எனவே எனது சாட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை**